இலங்கைக்கு கடத்த இருந்த 2 டன் பீடி இலைகள் லாரியுடன் பறிமுதல்; டிரைவர் கைது

தப்பியோடிய கும்பலுக்கு போலீசார் வலை வீச்சு

சாயல்குடி,நவ.4–

ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி அருகே உள்ள வேலாயுதபுரம் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட சுமார் ரூ.10 லட்சம் மதிப்பிலான 2 டன் பீடி இலைகளை லாரியுடன் போலீசார் அதிரடியாகப் பறிமுதல் செய்தனர்.

மேலும் ராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதிக ளில் இருந்து இலங்கைக்கு கடல்வழியாகத் தடை செய்யப்பட்ட பொருட்கள் கடத்தப்படுவது சமீபகாலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், சாயல்குடியை அடுத்த வேலாயுதபுரம் கடற்கரை பகுதியில் மர்ம கும்பல் ஒன்று சட்ட விரோதமாக பொருட்களைப் பதுக்கி வைத்திருப்பதாக போலீசாருக்கு ரகசியதகவல் கிடைத்தது.

இதையடுத்து, சம்பவ இ டத்திற்கு விரைந்து சென்ற சாயல்குடி காவல் துறையினர், அங்கு பதுங்கியிருந்த மர்ம கும்பலை அ தி ர டி யா க ச் சுற்றிவளைத்தனர். போலீசாரைக் கண்டதும் அதிர்ச்சியடைந்த அந்த கும்பலைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்டோர் அங்கிருந்து தப்பியோடினர்.

எனினும் போலீசாரின் இந்த அதிரடி வேட்டையில், சாயல்குடி அடுத்த கொக்கரசன் கோட்டை கிராமத்தை சேர்ந்த லாரி ஓட்டுநரான கொள்ளை கொண்டான் என்பவர் கையும் களவுமாகச் சிக்கினார். அவரைப் போலீசார் கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லாரியும், அதில் இருந்த சுமார் 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான இரண்டு டன் பீடி இலைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தக் கடத்தல் சம்பவத்தில் மூளையாகச் செயல்பட்டது தூத்துக்குடியைச் சேர்ந்த கார்த்தீஸ்வரன் என்பது போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

தலைமறைவாக உள்ள கார்த்திஸ்வரண் மற்றும் தப்பியோடிய 9 பேரை தீவிரமாகத் தேடும் வேட்டையைப் போலீசார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

முரசு புயலால் கனமழை

புழல் ஏரிக்கு நீர்வரத்து 435 கன அடியாக உயர்வு

மற்ற ஏரிகளுக்கும் நீர்வரத்து அதிகரித்தது

திருவள்ளூர், நவ. 4–

தொடர் மழை காரணமாக புழல் ஏரிக்கு நீர்வரத்து விநாடிக்கு 435 கன அடியாக அதிகரித்துள்ளது. பூண்டி, செம்பரம்பாக்கம், சோழவரம், கண்ணன் கோட்டைதேர்வாய் கண்டிகை ஏரிகளுக்கும் நீர்வரத்து அதிகரித்து வருகிறது.முரசு புயல் காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள சென்னைக்கு குடிநீர் தரும் முக்கிய ஏரிகளானபூண்டி, புழல், சோழவரம், கண்ணன் கோட்டைதேர்வாய் கண்டிகை மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று காலை நிலவரப்படி, புழல் ஏரிக்கு விநாடிக்கு 435 கன அடி நீர்வரத்து உள்ளது. ஆகவே 3,300 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட புழல் ஏரியின் நீர் இருப்பு 2,355 மில்லியன் கன அடியாக உள்ளது.

அதேபோல் செம்பரம்பாக்கம் ஏரிக்கு விநாடிக்கு 197 கன அடி நீர்வரத்து உள்ளது. இதனால் இதன் மொத்த கொள்ளளவான 3,645 மில்லியன் கன அடியில் 1,407 மில்லியன் கன அடி நீர் உள்ளது.

பூண்டி ஏரிக்கு 60 கன அடி நீர் வருகிறது. இதன் மொத்த கொள்ளளவான 3,231 மில்லியன் கன அடியில் 581 மில்லியன் கன அடி நீர் உள்ளது. சோழவரம் ஏரிக்கு 55 கன அடிநீர் வருகிறது. 1,081 மில்லியன்கன அடி கொள்ளளவு கொண்ட இந்த ஏரியில் 148 மில்லியன் கன அடியும், கண்ணன் கோட்டைதேர்வாய் கண்டிகை ஏரிக்கு 20 கன அடி நீர் வருவதால், 500 மில்லியன் கன அடி மொத்த கொள்ளளவில் 249 மில்லியன் கன அடியும் நீர் இருப்பு உள்ளது.

திருப்பத்தூர் அருகே பரபரப்பு

ஓய்வுபெற்ற கிராம நிர்வாக ஊழியர் வீட்டில் பெட்ரோல் குண்டு வீச்சு

மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் அட்டகாசம்; துணை போலீஸ் சூப்பிரண்டு சம்பவ இடத்தில் நேரில் விசாரணை

திருப்பத்தூர், நவ.4

திருப்பத்தூர் அருகே, ஓய்வுபெற்ற கிராம நிர்வாக அலுவலக ஊழியர் வீட்டில், மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் பெட்ரோல் குண்டு வீசினர். இந்த பரபரப்பு சம்பவம் பற்றிய விவரம் வருமாறு :– திருப்பத்தூர் அடுத்த அண்ணான்டப்பட்டி அம்பேத்கர்நகர் பகுதியை சேர்ந்த, பால்னாங்குப்பம் கிராம நிர்வாக அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற வீரமணி(70)–சாரதா தம்பதியினர் வசித்து வருகின்றனர்.

டி.வி. பார்த்து கொண்டிருந்தனர். அப்போது திடீரென வீட்டின் மீது வேகமாக கல் எறிவது போன்று சத்தம் கேட்டு வீரமணி கதவை திறக்க சென்றுள்ளார்.அப்போது மீண்டும் கல் எறிவது போன்று சத்தம் கேட்டதால் அதிர்ச்சி அடைந்த மனைவி சாரதா, கணவன் வீரமணியை வெளியில் செல்ல விடாமல் தடுத்துள்ளார்.

உடனடியாக வீரமணி அதே பகுதியை சேர்ந்த பாலாஜி என்பவருக்கு போன் செய்து தன்னுடைய வீட்டின் முன்பு நின்று கொண்டு யாரோ வீட்டின் மீது கல் எறிவதாக கூறியுள்ளார்.

அங்கு வந்து பார்த்த பாலாஜி, வீட்டின் மீது எறிந்தது கல் அல்ல பெட்ரோல் குண்டு என்பது தெரியவந்தது. இது தொடர்பாக பாலாஜி உடனடியாக ஜோலார்பேட்டை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்துவந்த ஜோலார்பேட்டை போலீசார் இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

அதில் பெட்ரோல் குண்டு வீசிய மர்மநபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து பெட்ரோல் குண்டு வீசியது தெரிய வந்தது.

மேலும் திருப்பத்தூர் டி.எஸ்.பி. முரளி நேரில் வந்து விசாரணை மேற்கொண்டார். இந்த நிலையில் வீரமணியின் மகன் அருண்குமார் மீது உள்ள முன்விரோதம் காரணமாக யாரேனும் இது போன்ற சம்பவத்தில் ஈடுபட்டனரா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு பெட்ரோல் குண்டு வீசி விட்டு சென்ற மர்ம நபர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.மேலும் வீட்டின் மீது மர்மநபர்கள் பெட்ரோல் குண்டு வீசிய சம்பவம் அப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காரைக்குடியில்

பதிவுத்துறை எழுத்தர்கள் கடையை அடைத்து 5 நாட்கள் போராட்டம்

முடங்கியது பத்திரபதிவுத்துறை

காரைக்குடி, நவ.4

தமிழக அரசின் பதிவுத்துறையில் அறிமுகப்படுத்தப் பட உள்ள இ ஹப் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, காரைக்குடி ஒருங்கிணைந்த பத்திரப்பதிவு அலுவலக வளாகம் அருகில் காரைக்குடி இணை 1, இணை 2, தேவகோட்டை, திருவாடானை, தொண்டி, மீமிசல், அறந்தாங்கி, பொன்னமராவதி, சிங்கம்புணரி மற்றும் திருப்பத்தூர் ஆகிய 10 சார் பதிவாளர் அலுவலகங்களை சேர்ந்த ஆவண ஏற்பாட்டாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால் இத்தொழிலை நம்பி வாழும் 20 லட்சம் தனியார் ஆவண எழுத்தர்கள் மற்றும் ஆவண ஏற்பாட்டாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு, பொதுமக்களுக்கு கூடுதல் பொருளாதார சுமைக்கு ஆளாவதோடு, பல்வேறு நடைமுறை சிக்கல்கள் ஏற்படும் என்று கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தங்களது கோரிக்கைகளுக்கு தீர்வு காணாவிட்டால் மண்டலம் மற்றும் மாநிலம் தழுவிய போராட்டங்களை நடத்த உள்ளதாக தெரிவித்தனர். 300க்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். அதற்கு முன்னோட்டமாக வருகிற 6ம் தேதி வரை கடைகளை அடைத்து எதிர்ப்பை காட்டியுள்ளனர்.

பட்டினப்பாக்கத்தில்

புதிய தலைமைச் செயலகம் அமைக்க கருத்து கேட்பு கூட்டம்

புறக்கணிப்பதாக மீனவ அமைப்புகள் அறிவிப்பு

சென்னை, நவ.4–

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்க சென்னை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தை புறக்கணிப்ப தாக மீனவ அமைப்புகள் அறிவித்துள்ளன. பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட அப்பகுதியில் உள்ள மீனவ அமைப்புகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் தொடர்ந்து எதிர்த்து வருகின்றன.

இந்நிலையில், மீன்வளத்துறை சார்பில், மீனவ அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகளை நேற்று கைபேசியில் அழைத்து, (நவ.3) ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் தலைமையில், புதிய தலைமைச் செயலகம் அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.அதில் ஒவ்வொரு அமைப்பின் ஓரிரு பிரதிநிதிகள்மட்டும் வந்து பங்கேற்க வேண்டும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, எழுத்துப்பூர்வமான அழைப்பு வராத நிலையில் மயிலை பகுதி அனைத்து மீனவ கிராம பஞ்சாயத்து சபை சார்பில், கருத்து கேட்பு கூட்டத்தில் பங்கேற்க இயலாது என நேற்று கடிதம் அளித்துள்ளதாக நெய்தல் மக்கள் கட்சி தலைவர் கு.பாரதி தெரிவித்துள்ளார்.

அருப்புக்கோட்டை அருகே

ரூ.2,000 லஞ்சம் வாங்கிய மின்வாரிய உதவிப் பொறியாளர் கைது

லஞ்ச ஒழிப்பு போலீசார் நடவடிக்கை

அருப்புக்கோட்டை நவ 4

விருதுநகர் மாவட்டம், பாப்பாகுளம் பகுதியில் சோடா கம்பெனியில் மின் இணைப்பின் குறைந்த மின்னழுத்தத்தை மாற்றித் தருவதற்காக ரூ.2,000 லஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் வீரசோழன் மின்வாரிய உதவிப் பொறியாளரை லஞ்ச ஒழிப்புப் போலீஸார் கையும் களவுமாகப் பிடித்துக்கைது செய்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விருதுநகர் மாவட்டம், பாப்பாகுளம் பகுதியைச் சேர்ந்த பிச்சை ராமு என்பவர்சோடாகம்பெனிநடத்தி வருகிறார். இவரது நிறுவனத்தில் குறைந்த மின்னழுத்தத்தில் மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. இதனால், தனது தொழில் நிறுவனத்தின் தேவைக்கேற்ப மின்னழுத்தத்தை உயர்த்தித் தருவதற்காக வீரசோழன் மின்வாரிய அலுவலகத்தை அணுகியுள்ளார். அப்போது, மின்னழுத்தத்தை மாற்றித் தருவதற்காக வீரசோழன் மின்வாரிய உதவிப் பொறியாளர் ராமூர்த்தி (46) என்பவர் பிச்சை ராமுவிடம் ரூ.2,000 லஞ்சமாகக் கேட்டதாகக் கூறப்படுகிறது. லஞ்சம் கொடுக்க விரும்பாத பிச்சை ராமு, இதுகுறித்து விருதுநகர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறையிடம் புகார் அளித்துள்ளார்.

புகாரின் அடிப்படையில், விருதுநகர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறை துணைக் காவல் கண்காணிப்பாளர் ராமச்சந்திரன் தலைமையிலான தனிப் படை போலீஸார், உதவிப் பொறியாளர் ராமூர்த்தியின் நடவடிக்கைகளைக் கண்காணித்து வந்தனர். மேலும், லஞ்சப் பணத்தைப் பெறும்போது அவரைக் கையும் களவுமாகப் பிடிப்ப தற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

இந் நி லை யி ல், திட்டமிட்டபடி நரிக்குடி பேருந்து நிலையம் அருகே பிச்சை ராமுவிடமிருந்து ரூ.2,000 லஞ்சப் பணத்தை ராமூர்த்தி பெற்றபோது, அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புப் போலீஸார் அவரைச்சுற்றிவளைத்துப் பிடித்தனர். தொடர்ந்து, அவரிடம் விசாரணை மேற்கொண்ட போலீஸார், அவரை வீரசோழன் மின்வாரிய அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

மின்னழுத்தத்தை மாற்றித் தருவதற்காக லஞ்சம் கேட்டதாக எழுந்த புகாரில் மின்வாரிய உதவிப் பொறியாளர் கையு செய்யப்பட்ட சம்பவம், அரசு அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது.

அசெட்ஸ் கேர் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன்
ACRE MAKING ASSETS WORK
பதிவு அலுவலகம்: 14வது தளம், ஈரோஸ் கார்ப்பரேட் டவர், நேரு பிளேஸ், புது தில்லி 110019
தொலைபேசி: 911143115600 தொலைநகல்: 911143115618
கார்ப்பரேட் அலுவலகம்: 101, கல்பதரு இன்ஃபினியா, பிளாட் பி, கிராண்ட் ஹயாட் அருகில், சாந்தாகுருஸ் (கிழக்கு), மும்பை – 400055, மகாராஷ்டிரா. தொலைபேசி: 022 68643101
மின்னஞ்சல்: acre.arc@acreindia.in இணையதளம்: www.acreindia.in **CIN: U65993DL2002PLC115769**

பின்னிணைப்பு IVA
அசையாச் சொத்துகளை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

'நிதிச் சொத்துகளின் பிணையமாக்கல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணைய உரிமைகளை அமல்படுத்துதல் சட்டம், 2002' மற்றும் அதனுடன் இணைந்த 'பிணைய உரிமைகளை அமல்படுத்துதல் விதிகள், 2002' (ன் விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ், அசையாச் சொத்துகளை மின்னணு ஏலம் (Eauction) மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு. பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன் பெற்றவர்கள் , இணைகடன் பெற்றவர்கள் அடமானம் வைத்தவர்கள் மற்றும் பிணையதாரர்களுக்கு (Guarantors) இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துகள் ' [CIN: U65993DL2002PLC115769] ("பிணையம் கொண்ட கடன் வழங்குநர்" Secured Creditor) நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன/பிணையமாக வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சொத்துகளின் உடற்பயன் உரிமையை மேற்படி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஏற்கனவே கையகப்படுத்தியுள்ளார். கடன் பெற்றவர்கள், இணைகடன் பெற்றவர்கள், அடமானம் வைத்தவர்கள் மற்றும் பிணையதாரர்களிடமிருந்து மேற்படி நிறுவனத்திற்கு வர வேண்டிய நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, இந்தச் சொத்துகள் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" ஏலம் விடப்படவுள்ளன. ஏலத்திற்கான குறைந்தபட்ச விலை (Reserve Price) மற்றும் முன்பண வைப்புத் தொகை (Earnest Money Deposit) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரங்கள்

Sr. No.	கடன் கணக்கு எண் / அறக்கட்டளை பெயர்	கடன் பெறுபவர்(கள்)/ இணைகடன் பெறுபவர்(கள்)/ அடமானம் வைப்பவர்(கள்)/ உத்தரவாதம் அளிப்பவர்(கள்)	மொத்த நிலுவைத் தொகை (ரூபாயில்)	குறைந்தபட்ச ஏல விலை விலை (ரூபாயில்)	முன்பணம் வைப்புத்தொகை (ரூபாயில்)	டிமாண்ட் டிராஃப்ட் / RTGS / NEFT மூலம் EMD தொகையைச் செலுத்துவதற்கான வங்கி கணக்கு விவரங்கள்
1	203517000142 / ACRE 196 TRUST	1) ஹரில் ஆர்.பி 2) கைருன்னீசா 3) எஸ் ஜிப்போரல்	ரூ. 1,63,01,235.12/ (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து மூன்று லட்சத்து ஒருநூற்று மும்பத்து ஐந்துமற்றும் பன்னிரண்டு பைசாக்கள் மட்டும்) 29.10.2026 தேதிய நிலவரப்படி.இதனுடன் 30.10.2026 முதல் பணம் செலுத்தும்மற்றும் வசூலாகும் தேதி வரை பொருந்தக்கூடிய வட்டி மற்றும் பிற கட்டணங்களும் சேரும்.	55,00,000/-	5,50,000/-	கணக்குப் பெயர்: ACRE196-TRUST கணக்கு எண்: 05430200005235 1 வங்கி: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (Indian Overseas Bank) IFSC குறியீடு: IOBA0000543

பிணையச் சொத்தின் விவரணை: 'அ' அட்டவணைச் சொத்து (முழுச் சொத்து) உருப்படி எண் 1 காஞ்சிபுரம் மாவட்டம் (தற்போது சென்னை மாவட்டம்), சோழிங்கநல்லூர் வட்டம், நீலாங்கரை கிராமம், துரைப்பாக்கம் இணைப்புச் சாலையில் அமைந்துள்ள காலி நிலம். இதில், பிளாட் எண் 1 (பரப்பளவு 83.98 சதுர மீட்டர் அல்லது 904 சதுர அடி) மற்றும் பிளாட் எண் 2 (பரப்பளவு 82.44 சதுர மீட்டர் அல்லது 887 சதுர அடி) என மொத்தம் 1791 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் அடங்கும். இது பெருநகர சென்னை மாநகராட்சியால், உட்பிரிவு திட்டமில்ல அனுமதி எண் SD/WDCn15/00321/18 (தேதி: 26.07.2018) மூலம் அங்கீகரிக்கப்பட்டது. இது பழைய சர்வே எண் 14/3என் ஒரு பகுதியாகும்; பட்டா எண் 7116என்படி, புதிய சர்வே எண் 14/3C2 என வகைப்படுத்தப்பட்டுள்ளது. பிளாட் எண் 1ன் எல்லைகள்: வடக்கு முக்கிய துரைப்பாக்கம் நீலாங்கரை இணைப்புச் சாலை; தெற்கு பிளாட் எண் 2; மேற்கு திரு. எஸ். இளங்கோவன் என்பவருக்குச் சொந்தமான சொத்து; மேற்கு 16 அடி அகலமுள்ள சாலை. அளவீடுகள்: வடக்கு 8.54 மீட்டர் (28 அடி); தெற்கு 8.54 மீட்டர் (28 அடி); கிழக்கு 9.84 மீட்டர் (32.3 அடி); மேற்கு 9.84 மீட்டர் (32.3 அடி). பிளாட் எண் 2ன் எல்லைகள்: வடக்கு பிளாட் எண் 1; தெற்கு பிளாட் எண் 3; கிழக்கு திரு. எஸ். இளங்கோவன் என்பவருக்குச் சொந்தமான சொத்து; மேற்கு 16 அடி அகலமுள்ள சாலை. அளவீடுகள்: வடக்கு 8.53 மீட்டர் (28 அடி); தெற்கு 8.53 மீட்டர் (28 அடி); கிழக்கு 9.66 மீட்டர் (31.68 அடி). மேற்கு: 9.66 மீட்டர் (31.68 அடி). மேற்கூறிய இரண்டு மனைகளும் சேர்ந்து மொத்தம் 1791 சதுர அடி பரப்பளவு கொண்டவை; இவை சென்னை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை துணைபதிவு மாவட்டத்திற்கு உட்பட்டவை.

உருப்படி எண் 2 நீலாங்கரை கிராமம், துரைப்பாக்கம் இணைப்புச் சாலை, சோழிங்கநல்லூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் (தற்போது சென்னை மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள, பிளாட் எண் 3 கொண்ட காலி நிலம். இதன் பரப்பளவு 97.97 சதுர மீட்டர் (1055 சதுர அடி). இது பெருநகர சென்னை மாநகராட்சியின் உட்பிரிவு திட்டமிடல் அனுமதி எண் SD/WDCN15/00321/18 (தேதி: 26.07.2018, வார்டு எண்: 193) மூலம் அங்கீகரிக்கப்பட்டது. இது பழைய சர்வே எண் 14/3என் ஒரு பகுதியாகும்; பட்டா எண் 7116என் படி, புதிய சர்வே எண் 14/3C5 என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு: பிளாட் எண் 1 (83.98 சதுர மீட்டர் / 904 சதுர அடி) வடக்கு: ஒக்கியம் துரைப்பாக்கம் நீலாங்கரை இணைப்புச் சாலை; தெற்கு: பிளாட் எண் 2; கிழக்கு: திரு. S. இளங்கோவன் அவர்களின் சொத்து; மேற்கு: 16 அடி அகலமுள்ள சாலை. அளவுகள்: வடக்கு பக்கம்: 8.54 மீட்டர் (28 அடி); தெற்கு பக்கம்: 8.54 மீட்டர் (28 அடி); கிழக்கு பக்கம்: 9.84 மீட்டர் (32.3 அடி); மேற்கு பக்கம்: 9.84 மீட்டர் (32.3 அடி). பிளாட் எண் 2 (82.44 சதுர மீட்டர் / 887 சதுர அடி) வடக்கு: பிளாட் எண் 1; தெற்கு: பிளாட் எண் 3; கிழக்கு: திரு. S. இளங்கோவன் அவர்களின் சொத்து. மேற்குப் பக்கத்தில் 16 அடி அகலமுள்ள சாலை உள்ளது. இதன் அளவுகள் பின்வருமாறு: வடக்கு பக்கம் 8.53 மீட்டர் (28 அடி); தெற்கு பக்கம் 8.53 மீட்டர் (28 அடி); கிழக்கு பக்கம் 9.66 மீட்டர் (31.68 அடி); மேற்கு பக்கம் 9.66 மீட்டர் (31.68 அடி). மேற்கூறிய இரண்டு மனைகளும் மொத்தம் 1791 சதுர அடி பரப்பளவு கொண்டவை. இவை சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட நீலாங்கரை துணைப் பதிவு மாவட்ட எல்லைகளுக்குள் அமைந்துள்ளன. உருப்படி எண் 2: நீலாங்கரை கிராமம், துரைப்பாக்கம் இணைப்புச் சாலை, சோழிங்கநல்லூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் (தற்போது சென்னை மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள, பிளாட் எண் 3 கொண்ட காலி நிலம். இதன் பரப்பளவு 97.97 சதுர மீட்டர் (1055 சதுர அடி). இது பெருநகர சென்னை மாநகராட்சியின் உட்பிரிவு திட்டமிடல் அனுமதி எண் SD/WDCN15/00321/18 (தேதி: 26.07.2018, வார்டு எண்: 193) மூலம் அங்கீகரிக்கப்பட்டது. இது பழைய சர்வே எண் 14/3என் ஒரு பகுதியாகும்; பட்டா எண் 7116என் படி, புதிய சர்வே எண் 14/3C5 என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு: பிளாட் எண் 1 (83.98 சதுர மீட்டர் / 904 சதுர அடி) வடக்கு: ஒக்கியம் துரைப்பாக்கம் நீலாங்கரை இணைப்புச் சாலை; தெற்கு: பிளாட் எண் 2; கிழக்கு: திரு. S. இளங்கோவன் அவர்களின் சொத்து; மேற்கு: 16 அடி அகலமுள்ள சாலை. அளவுகள்: வடக்கு பக்கம்: 8.54 மீட்டர் (28 அடி); தெற்கு பக்கம்: 8.54 மீட்டர் (28 அடி); கிழக்கு பக்கம்: 9.84 மீட்டர் (32.3 அடி). பிளாட் எண் 2 (82.44 சதுர மீட்டர் / 887 சதுர அடி) வடக்கு: பிளாட் எண் 1; தெற்கு: பிளாட் எண் 3; கிழக்கு: திரு. S. இளங்கோவன் அவர்களின் சொத்து; மேற்கு: 16 அடி அகலமுள்ள சாலை; அளவுகள்: வடக்கு பக்கம் 8.53 மீட்டர் (28 அடி); தெற்கு பக்கம் 8.53 மீட்டர் (28 அடி); கிழக்கு பக்கம் 9.66 மீட்டர் (31.68 அடி); மேற்கு பக்கம் 9.66 மீட்டர் (31.68 அடி). மேற்கூறிய இரண்டு மனைகளும் சேர்ந்து மொத்தம் 1791 சதுர அடி பரப்பளவு கொண்டவை. இவை சென்னை தெற்கு பதிவு மாவட்டத்தின் கீழ், நீலாங்கரை துணைப் பதிவு மாவட்ட எல்லைகளுக்குள் அமைந்துள்ளன.

2	203517000143 / ACRE 196 TRUST	1) ஹரில் ஆர்.பி 2) கைருன்னீசா 3) எஸ் ஜிப்போரல்	29.10.2026 தேதியின்று ரூ. 1,62,15,835.73/ (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து இரண்டு லட்சத்து பதினைந்தாயிரத்து எண்ணூற்று முப்பத்தைந்து மற்றும் எழுபத்து மூன்று பைசாக்கள் மட்டும்); இதனுடன், 30.10.2026 முதல் பணம் செலுத்தும் மற்றும் வசூலாகும் தேதி வரை பொருந்தக்கூடிய வட்டி மற்றும் பிற கட்டணங்களும் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும்.	55,00,000/-	5,50,000/-	கணக்குப் பெயர்: ACRE196-TRUST கணக்கு எண்: 05430200005235 1 வங்கி: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (Indian Overseas Bank) IFSC குறியீடு: IOBA0000543

பிணையச் சொத்தின் விவரணை: "A" அட்டவணைச் சொத்து (முழுச் சொத்து) உருப்படி எண்: 1 நீலங்கரை கிராமம், துரைப்பாக்கம் இணைப்புச் சாலை, சோழிங்கநல்லூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் (தற்போது சென்னை மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள, பிளாட் எண் 1 (பரப்பளவு 83.98 சதுர மீட்டர் அல்லது 904 சதுர அடி) மற்றும் பிளாட் எண் 2 (பரப்பளவு 82.44 சதுர மீட்டர் அல்லது 887 சதுர அடி) என மொத்தம் 1791 சதுர அடி நிலம் அடங்கும். இது சென்னை மாநகராட்சியின் திட்டமிடல் அனுமதி எண்: SD/WDCN15/00321/18 (தேதி: 26.07.2018, வார்டு எண்: 193) மூலம் அங்கீகரிக்கப்பட்டது. இது பழைய சர்வே எண் 14/3என் ஒரு பகுதியாகும்; பட்டா எண் 7116என் படி, புதிய சர்வே எண் 14/3C2 என வகைப்படுத்தப்பட்டுள்ளது. எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு: பிளாட் எண் 1 (83.98 சதுர மீட்டர் / 904 சதுர அடி) வடக்கு: ஒக்கியம் துரைப்பாக்கம் நீலாங்கரை இணைப்புச் சாலை; தெற்கு: பிளாட் எண் 2; கிழக்கு: திரு. S. இளங்கோவன் அவர்களின் சொத்து; மேற்கு: 16 அடி அகலமுள்ள சாலை. அளவுகள்: வடக்கு பக்கம்: 8.54 மீட்டர் (28 அடி); தெற்கு பக்கம்: 8.54 மீட்டர் (28 அடி); கிழக்கு பக்கம்: 9.84 மீட்டர் (32.3 அடி). பிளாட் எண் 2 (82.44 சதுர மீட்டர் / 887 சதுர அடி) வடக்கு: பிளாட் எண் 1; தெற்கு: பிளாட் எண் 3; கிழக்கு: திரு. S. இளங்கோவன் அவர்களின் சொத்து. மேற்குப் பக்கத்தில் 16 அடி அகலமுள்ள சாலை உள்ளது. இதன் அளவுகள் பின்வருமாறு: வடக்கு பக்கம் 8.53 மீட்டர் (28 அடி); தெற்கு பக்கம் 8.53 மீட்டர் (28 அடி); கிழக்கு பக்கம் 9.66 மீட்டர் (31.68 அடி); மேற்கு பக்கம் 9.66 மீட்டர் (31.68 அடி). மேற்கூறிய இரண்டு மனைகளும் மொத்தம் 1791 சதுர அடி பரப்பளவு கொண்டவை. இவை சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட நீலாங்கரை துணைப் பதிவு மாவட்ட எல்லைகளுக்குள் அமைந்துள்ளன. உருப்படி எண் 2: நீலாங்கரை கிராமம், துரைப்பாக்கம் இணைப்புச் சாலை, சோழிங்கநல்லூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் (தற்போது சென்னை மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள, பிளாட் எண் 3 கொண்ட காலி நிலம். இதன் பரப்பளவு 97.97 சதுர மீட்டர் (1055 சதுர அடி). இது பெருநகர சென்னை மாநகராட்சியின் உட்பிரிவு திட்டமிடல் அனுமதி எண் SD/WDCN15/00321/18 (தேதி: 26.07.2018, வார்டு எண்: 193) மூலம் அங்கீகரிக்கப்பட்டது. இது பழைய சர்வே எண் 14/3என் ஒரு பகுதியாகும்; பட்டா எண் 7116என் படி, புதிய சர்வே எண் 14/3C5 என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு: வடக்கு பிளாட் எண் 2; தெற்கு: பட்டாபி நாயக்கருக்குச் சொந்தமான சொத்து; மேற்கு: 16 அடி அகலமுள்ள சாலை மற்றும் பிளாட் எண் 4. அளவுகள்: வடக்கு பக்கம்: 7.01 மீட்டர் (23 அடி); தெற்கு பக்கம்: 7.08 மீட்டர் (23.1 அடி); கிழக்கு பக்கம்: 13.5 மீட்டர் (44.3 அடி); மேற்கு பக்கம்: 14.45 மீட்டர் (47.3 அடி). மொத்தம் 1055 சதுர அடி பரப்பளவு கொண்ட இந்த மனை, சென்னை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை துணைபதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது. "B" அட்டவணைச் சொத்து (இதன் மூலம் அடமானம் வைக்கப்படுவது): "A" அட்டவணைச் சொத்திலிருந்து 590 சதுர அடி பிரிக்கப்படாத நில உரிமை, அதனுடன் 1342 சதுர அடி மொத்தக் கட்டுமானப் பரப்பு (பொதுப் பகுதிகள் உட்பட) மற்றும் 1 மூடப்பட்ட கார் நிறுத்துமிடம் ஆகியவற்றைக் கொண்ட, மூன்றாவது தளத்தில் அமைந்துள்ள 3 படுக்கையறைகள், வரவேற்பறை மற்றும் சமையலறை (3 BHK) கொண்ட T1' அடுக்குமாடி குடியிருப்பு.

| 3 | 203517000149 / ACRE 196 TRUST | 1) நொஃபல் எய்யாளிக்கோத் 2) அர்வத் இ கே | 29102026 தேதியின்று ரூ. 1,16,87,951.14/ (ரூபாய் ஒரு கோடியே பதினாறு